Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-IV

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி-27 | 12-08-2005 | வெள்ளிக்கிழமை | ஓசை-175



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-12429) விநாயகர் வீதி, மயிலிட்டி.

## கிழக்கில் இயங்கும் ஆயுதக் குழுக்களின்

# ஆயுதங்களை அரசாங்கம் களையாவிடின்

# முழு அளவில் ஆயுத மோதல் வெடிக்கும்!

## அரசியல் ஆலோசகர் எச்சரிக்கை

(லண்டன்)



**சிறிலங்கா இராணுவத்தின் ஆதரவுடன் கிழக்கில் இயங்கும் ஐந்து ஆயுதக் குழுக்கள் எமது போராளிகள் மீது தாக்குதல்களை நடத்தி வருகின்றன. இவர்களிடமிருந்து ஆயுதங்கள் களையப் படாவிடின் முழு அளவில் ஆயுத மோதல் வெடிக்கக் கூடும் என தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இது குறித்து தமிழ் இணையத் தளத்திற்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

அரசாங்கம் கிழக்கில் இயங்கும் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக் களையாதுவிடின் கிழக்கில் தற்போது ஏற்பட்டிருக்கும் பதற்றமான சூழ்நிலையானது முழு அளவிலான ஆயுதமோதலாக வெடிக்கக்கூடும்.

கிழக்கில் கருணா குழுவையும் சேர்த்து ஐந்து ஆயுதக் குழுக்கள் இயங்குகின்றன. சிறிலங்கா இராணுவத்தின் ஆதரவுடன் இயங்கும் இந்தக் குழுக்கள் கிழக்கில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் விடுதலைப் புலிகள் மீது தாக்குதலைத் தொடுத்து வருகின்றன.

(IVஆம் பக்கம் பார்க்க)

## சிறி. இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு ஆரம்பம்

சிறிலங்கா இராணுவப் பொலிசாருக்கு புதிதாக ஆட்களைச் சேர்க்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. கடந்த செவ்வாய்க் கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆட் சேர்ப்பு நடவடிக்கை இம்மாதம் 12ஆம் திகதி வரை நடைபெறும் நேர்முகப் பரீட்சைகள் நாரஹேன் பிட்டி, கிரிதலே, அனுராதபுரம் ஆகிய இடங்களிலுள்ள இராணுவப் பொலிஸ் படைமுகாம்களில் நடைபெறும்-விண்ணப்பதாரிகள் தேசிய அடையாள அட்டை, கிராம சேவகர் சான்றிதழ், கல்விச் சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றுடன் நேரில் வருமாறு கேட்கப் பட்டுள்ளனர்.

## 88 மேஜர்களுக்கு பதவி உயர்வு

சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த 88 இராணுவ மேஜர்கள் லெப்டினன் கேணல்களாக பதவியுயர்த் தப்பட்டுள்ளனர்.

பதவியுயர்வுகள் வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்தினால் பல காலம் ஒரே பதவியில் இருந்த 88மேஜர் களே இவ்வாறு பதவியுயர்த்தப் பட்டுள்ளனர்.

அரசுத்தலைவரிடமிருந்து கிடைத்த விசேட அனுமதிக்கமையவே இவர்கள் பதவி உயர்வு பெற்றுள்ளனர். ஒரே நேரத்தில் இவ்வளவு பெரும் எண்ணிக்கையானோர் லெப்டினன் கேணல்களாக பதவியுயர்த்தப்பட்டமை இதுவே முதல் தடவை என்று கூறப்படுகிறது.

## முல்லை. ஊடாக செல்லவிருந்த கப்பலில் ஆயுதங்கள்!

### கொழும்புத் துறைமுகத்தில் சோதனை

இந்தோனேசியாவிலிருந்து ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு முல்லைத்தீவு கடல் வழியாகப் பங்களாதேசிற்குச்செல்லவிருந்த கப்பல் ஒன்றை சிறிலங்காப் படையினர் கொழும்புத்துறைமுகத்திற்குள் வரவழைத்து சோதனை மேற் கொண்டுள்ளனர்.

சிங்கப்பூருக்குச்சொந்தமான இந்தக்கப்பலில் மோட்டார் குண்டுகளும் நோயாளர் காவுவண்டிகளும் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இத் தகவலை சிறிலங்காவின் இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் தயாரத்நாயக்கவும் ஊர்ஜிதம் செய்துள்ளார். ஆயினும் கப்பல் பின்னர் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வரவு- செலவுத்திட்டம் நவம்பர்-10 இல் பாராளுமன்றில் சமர்ப்பிக்க முடிவு

(கொழும்பு)

2006ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் பத்தாம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என நிதி அமைச்சின் செயலாளர் பி.பி. ஜயசுந்தர நேற்று முன்தினம் கொழும்பில் நடந்த பத்திரிகையாளர்களின் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைச் செலவைக்குறைப்பதுடன் மக்கள் வருமானங்கள் ஈட்டும் வழிமுறைகளை அறிமுகம் செய்தல், சிறந்த சுகாதார சேவை, சிறந்த கல்வி முறைகளை அமுற்படுத்துதல். வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவித்தல்,பாதுகாப்பு செலவீனங்களைக் கட்டுப்படுத்தல், விவசாய ஊக்குவிப்புக்கள் அறிமுகம், அரசநிர்வாகசேவை மாற்றியமைத்து அதைப் பலப்படுத்துதல்

(IVஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரம் தடை

மின்பிறப்பாக்கியில் பராமரிப்பு/ திருத்த வேலைகள் நடைபெறவுள்ளதால் கிளிநொச்சிப் பகுதியில் நாளை மறுதினம் அதிகாலை 4.30 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரை மின்சாரம் தடைப் படும் என மின்சார சபையினர் வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றனர்.

## போர்நிறுத்தத்தைத் தொடர்வதற்கு அரசு சாதகமற்ற சூழ்நிலையை திணிக்கின்றது

### கண்காணிப்புக்குழுவிடம் இளந்திரையன் எடுத்துரைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் அண்மைக காலங்களில் இடம்பெற்றுவரும் சம்பவங்கள் தொடர்பாக எமது நிலைப்பாட்டை இலங்கைப் போர்நிறுத்தக் கண் காணிப்புக்குழுவின் தலைவருக்கு விரிவாக விளக்கியிருப்பததாக விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் தெரிவித் துள்ளார்.

போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்டுடன் நேற்று நடைபெற்ற சந்திப்புக்குப்பின் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; அண்மைக் காலமாக படைத்தரப்பினர் கடைப்பிடித்து வருகின்ற விறைப்பான போக்கையே சிறிலங்கா அரசாங்கமும் கடைப்பிடித்து வருகின்றது. போர் நிறுத்தத்தைத் தொடர்வதற்கு சாதக மற்ற சூழ்நிலைகளை அரசாங்கமும் படைத்தரப்பும்

(IVஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி நிவாரண சபையைக் கலைக்காவிடின்

## தேர்தலில் கூட்டமைப்பு அரசுடன் உடன்பாடில்லை

### -பா.உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவிப்பு



சுனாமி நிவாரண சபையை உடனடியாகக் கலைக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் எதிர்வரும் சனாதிபதித்தேர்தலில் கூட்டமைப்பு அரசுடன் எதுவித உடன்பாட்டிற்கும் வரப் போவதில்லை என சுனாமி நிவாரண சபை தொடர்பில் நேற்று வியாழக்கிழமை பாராளுமன்றில் இடம்பெற்ற ஒத்திவைப்பு விவாதத்தின் போது ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் இதன் மூலமாக சட்டரீதியான அனுமதியைப் பெறுகின்றனர் என்றும், நிவாரண சபையின் உள்ளடக்கங்களை நெறிப்படுத்துவது உலக வங்கியே என்றும் அவர் தெரிவித்துள்ளார்.அதேபோல பாராளு மன்றத்திற்கே உரித்தான நிதிப் பரிபாலன

(IVஆம் பக்கம் பார்க்க)

## வா விளம்பரம்

### தவறிவிட்டது

இராசரத்தினம் அமிர்தலிங்கம் 21, கரம்பைக்காடு வவுனியா இவருடைய சாரதி அனுமதிப் பத்திரம் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சியிலுள்ள ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கவும். (சி.12515)

### பிற்போடப்பட்டது

கிளிநொச்சி மாவட்ட "தேசிய எழுச்சி நிகழ்வு"தொடர்பாக ஆசிரியர்களுடன் கோட்டரீதியாக நடாத்த திட்டமிடப்பட்ட சந்திப்புக்கள் பிற்போடப் பட்டுள்ளன. எதிர்வரும் 17.08.2005 இல் கோட்டக்கல்வி அலுவலர்களுடன் நடைபெறவிருக்கும் சந்திப்பின் பின்னர் முறையான அறிவித்தல்கள் தரப் படும் என்பதை கிளி. வலயக் கல்விப் பணிப்பாளர் அறியத்தருகின்றார்.

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

MS Office, Desktop Publishing (D.T.P), Hardware 13-08-2005 சனிக்கிழமை K.S.K. கணினி நிலையம் புதுக்குடியிருப்பில் ஆரம்பம். பிரிவு I மாலை 3.00 மணிக்கு, பிரிவு II இரவு 7.00 மணிக்கு. அனுமதிக் கட்டணங்கள் இலவசம். பயிற்சி முடிவில் அரச, சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். நிர்வாகம். (6120)

### காணி விற்பனைக்குண்டு

புதுக்குடியிருப்பு கைவேலியில் இரண்டு ஏக்கர் உறுதிக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: நவரட்ணம் (அண்ணாவி) கைவேலி. (காலை 7.30 மணிக்கு முன்)(6537)

## உணவு,மருத்துவ உரிமத்திற்கு விண்ணப்பிக்காதோர் கவனத்திற்கு

இதுவரை தமிழீழ சுகாதார சேவைகளின் உணவு, மருத்துவ உரிமங்களுக்கு விண்ணப்பிக்கத் தவறியவர்கள் எதிர்வரும் 30.08.2005 இற்கு முன்பாக எமது மாவட்டப் பணிமனைகளில் அல்லது எமது பிரதேச சுகாதார இணைப்பாளர்களிடம் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். விண்ணப்பிக்கத்தவறும் நிலையங்கள் மீது தமிழீழ உணவுச் சட்டத்திற்கமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**பணிப்பாளர்,**
**தமிழீழ சுகாதார சேவைகள்,**
**தமிழீழம்.**

(சி-12498)

## நன்றி நவில்தல்

என் மகன் மாவீரர் ஈழராசனின் (நீதிவளவன்) விழுதொன்றின் குரல் அல்லது மனிதம் புரிதல் நூல் வெளியீடு சார்பாக

புலிகளின்குரல், நிதர்சனம், அரசியல்துறை, தமிழர்புனர்வாழ்வுக்கழகம் கோகுலன், அரசண்ணா, இளங்குமரன், பாலகுமாரன், கலைவாணன், தமிழன்பன், கலையழகன்,சத்தியமூர்த்தி, பரமநாதபிள்ளை, அருள், திருமாறன், பிரதிகள் பெற்றோர், மனிதம் புரிந்து விழாவைச் சிறப்பித்தோர் அனைவர்க்கும் இதயம் நிறைந்த

நன்றி அறிதலைத் தெரிவிக்கின்றோம்.

*நீதியின் நிழல்,*
*அறிவியல் நகர்,*
*கிளிநொச்சி.*

வளவை வளவன்
- மாவீரரின் அப்பா -

(6534)

## சாவு அறிவித்தல்



சோமசுந்தரம் சிவசுப்பிரமணியம்
(மணியம் ஆசாரி)

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தை சொந்த இடமாகவும், 62/2 பருத்தித்துறைவீதி-2ஆம் ஒழுங்கையினை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சிவசுப்பிரமணியம் (மணியம் ஆசாரி) 11.08.2005 வியாழக் கிழமை கிளிநொச்சியில் காலமானார்.

அன்னார் சிவசுப்பிரமணியம் மகேந்திரராணியின் அன்புக் கணவரும், சிவிதா,சியோ ஆகியோரின் அன்புத்தந்தையாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.08.2005 இன்று மாலை 5.00மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

62/2, பருத்தித்துறை வீதி,
2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி:- 021-2227215 (6536)

*தகவல்:-*
*சியோ(மகன்)*

மாவட்டபிரதித்திட்டப்பணிப்பாளர்,நிகொட், வவுனியா,
பிரதி:-திட்டப்பணிப்பாளர்,
திட்டமுகாமைத்துவப்பிரிவு,
நிகொட், திருகோணமலை

## உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சு
## வடக்கு கிழக்கு மாகாணசபை
## வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி விஸ்தரிப்பு திட்டம் (நிகொட்-விஸ்தரிப்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆஅவ" கடன் இல. 2084 – SRI(SF)

# கேள்வி கோரல் - இல.01

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி விஸ்தரிப்பு திட்டம் (NECORD-Ext.) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ADB") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னகத்து தொழில்தருனராகக் குறிப்பிடப்படும் (NECORD), கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக வவுனியா மாவட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த இக்டாட் பதிவு | கூறுவிலைப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | VA/NECORD-Ext/ED/01 | வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணியில் ஆசிரியர்களுக்கான கூட்டு விடுதி அமைத்தல். | M6 | 60,000/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களின் கூறுவிலையிடல் ஏற்றுக்கொள்ளப்படும்.

    I. நிருமாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

    II. இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக (இக்டாட் உடன் மேற்படி M7இற்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

    III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்ததன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்பட வேண்டும்.

    IV. இக்டாட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

    V. மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

    VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

4. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலும் தகவலை மாவட்ட பிரதிக் கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, வவுனியாவில் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி: 024–2222589, பக்ஸ்: 024–2222589, ஈமெயில்: necordva@sltnet.lk.

5. ஒப்பந்த ஆவணங்களை ஆகஸ்ட் 12 இல் இருந்து ஆகஸ்ட் 24, 2005 வரை முற்பகல் 9.30இல் இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து, ரூபா ஆயிரம் (1,000/=) மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு மீது கொள்வனவு செய்யப்படலாம்.

6. முன்கூட்டிய கேள்விகோரல் கூட்டமொன்று, மேற்படி அலுவலகத்தில் ஆகஸ்ட் 18ஆம் திகதி முற்பகல் 10.30 இற்கு நடைபெறும்.

7. கேள்விகோருவோர் முன்தகுதிக்கு அவசியமான ஆவணமும், விலையிடப்பட்ட கேள்விகளினதும் இரண்டு பிரதிகளும் பொறிவைக்கப்பட்ட தனித்தனி உறைகளில் சமர்ப்பிக்கப்படவேண்டும்

8. அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர், மாவட்ட கேள்விச்சபை, NECORD, மாவட்ட கருத்திட்ட அலுவலகம், கச்சேரி, வவுனியாவிற்கு ஆகஸ்ட் 31, 2005 பிற்பகல் 3.00மணிக்கு முன்பதாக கிடைக்க அனுப்பப்படவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகோருவோர், அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

9. கேள்விகள் தயாரிப்பினால் அல்லது ஒப்படைப்பினால் கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏ ாவது ஆகுசெலவுகளுக்கு, அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருனர் பொறுப்பாகமா ர்.

*சி. சண்முகம்*
*தலைவர்,*
*மாவட்ட கேள்விச்சபை / அரசாங்க அதிபர்,*
*வவுனியா மாவட்டம்.*

(சி-12518)

# கருணா குழுவின் ஆயுதங்களை அரசு களைய முயற்சிக்கமாட்டாது

**- அரச சமாதான செயலகப்பணிப்பாளர்**

(கொழும்பு)

அரசாங்கம் கருணா குழுவின் ஆயுதங்களைக் களையும் நடவடிக்கைகளில் ஈடுபடாது என சிறிலங்கா அரசாங்கத்தின் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.

ரொய்ட்டர் நிறுவனத்திற்கு அளித்த செவ்வி ஒன்றிலேயே இந்தக் கருத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

கருணா குழுவினரின் ஆயுதங்களைக் களைவதற்காக வனப் பகுதிக்குள் அரசாங்கப்படைகள் செல்லுமானால் அது பாரிய விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

தமிழீழ விடுதலைப்புலிகளையும், கருணா குழுவினரையும் இனங்காண முடியாத சூழ்நிலையில் இது முழுமையாக போர் நிறுத்த உடன்பாட்டையே பாதிக்கக்கூடி । பிரச்சினையாகும்.

கருணா குழு துணை இராணுவப்படையாகச் செயற்படுவதற்கு வாய்ப்பில்லை எனத் தெரிவித்துள்ள அவர், அவர்கள் போர் நிறுத்த உடன்பாட்டிற்கு முன்னர் அவ்வாறு இருந்ததில்லை என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தமிழீழ விடுதலைப்புலிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள உள்ளகப் பிரச்சினையாகும்.

சர்வதேச சமூகம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் சில தடை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அவர்கள் சிறுவர்களை இன்னமும் படைகளில் சேர்த்து வருகின்றனர். சர்வதேச அழுத்தங்கள் இதனைக் கட்டுப்படுத்தக் கூடியவையாக இருக்கும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை சமாதானச் செயலக துணைப்பணிப்பாளர் ஜோன் குணரத்ன இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் புலிகளின் பாதுகாப்பான பயணம் குறித்துத் தெரிவிக்கையில்;

இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகள் ஊடாக போராளிகள் பயணம் செய்யும் வாகனங்களில் இராணுவத்தினரும் சேர்ந்து பயணம் செய்ய வேண்டுமென இராணுவ அதிகாரிகளுக்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதாக வெளியான செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை.

விடுதலைப்புலிகள் பயணம் குறித்த விடயத்திற்கு இதுவரை தீர்வினைப் பெறாத நிலையில் விடுதலைப்புலிகள் பயணம்செய்யும் வாகனங்களில் அவர்களுக்கு துணைவழங்கும் விதமாக அவர்களுடன் சேர்ந்து செல்லுமாறு இராணுவத்தினரைப் பணிக்க வேண்டிய தேவை அரசாங்கத்திற்கில்லை.

விடுதலைப்புலிகளின் பயணம் தொடர்பாக அராசாங்கம் இறுதியாக விடுதலைப்புலிகள் அனுப்பிவைத்துள்ள யோசனைகளுக்காக விடுதலைப்புலிகளுக்கு அனுப்பும் பதில்களிலேயே இந்த விவகாரத்தின் அடுத்தகட்ட நகர்வு தங்கியுள்ளது என்றார். (32)

# போராளிகள் கொல்லப்பட்ட இடத்தை ஹொக்லண்ட் நேரில் சென்று பார்வை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் நிலவரம் குறித்து நேரில் ஆராய்வதற்காக விஜயம் செய்த போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் விடுதலைப்புலிகளின் அரசியல்துறை போராளிகள் படுகொலை செய்யப்பட்ட இடத்தை நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டத்திற்கான விஜயத்தை நேற்று முன்தினம் மேற்கொண்ட அவர். மாவட்ட கண்காணிப்பாளர்கள், விடுதலைப்புலிகளின் அரசியல்துறையினர், சிறிலங்கா பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படை உட்பட போர் நிறுத்த உடன்படிக்கையுடன் தொடர்புடைய தரப்பினரைச் சந்தித்து உரையாடினார்.

புலிகளின் சந்திப்பின் பின்பு கண்காணிப்புக்குழுத்தலைவர் விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு இணங்க நேற்றுமுன்தினம் காலை இரண்டு போராளிகள் சுட்டுக்கொல்லப்பட்ட காஞ்சிரங்குடா சந்திக்குச்சென்று சம்பவம் தொடர்பாக நேரடியாகப் பார்வையிட்டார்.

அப்பகுதியிலுள்ள மக்களிடமும் சம்பவம் தொடர்பாகக் கேட்டறிந்து கொண்டார்.

# வயோதிபரிடம் கொள்ளையடித்த மூவர் யாழ்.அரசியல்துறையினரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ் நல்லூர் பிரதேசத்தில் சிற்றூர்தி ஒன்றில் வந்து கொண்டிருந்த சுப்பிரமணியம் பரமசிவம் (வயது 65) கம்பர்மலை, பாரதிநகர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த முதியவர் ஒருவரிடம் இருந்து ரூபா பன்னிரண்டாயிரம் ரொக்கப்பணத்தைக் கொள்ளையடித்த மூன்று கொள்ளையர்கள் துரிதகதியில் செயற்பட்டு யாழ். பிரதேசஅரசியல் துறையினர் கைதுசெய்து பணத்தை இக் கொள்ளைக்கும்பலிடம் இருந்து மீட்டுள்ளதாகத் தெரியவரு கிறது.

சம்பவம் நடைபெற்ற குறிப்பிட்ட நேரத்தினுள் இம் முதியவர் கொடுத்த முறைப்பாட்டையடுத்தே இக் கொள்ளைக் கும்பல் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (28)

# மாந்தீவு தொழுநோயாளர் வைத்தியசாலையை சிறிலங்காப் படையினர் ஆக்கிரமிக்க முயற்சி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாந்தீவு தொழுநோயாளர் வைத்தியசாலையின் பாவனையிலில்லாக் கட்டடங்களை சிறிலங்காப்படையினர் ஆக்கிரமிப்புச் செய்ய நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர். இது தொடர்பாக மின்னேரிப் படை முகாமிலிருந்து உயர்மட்டபடை அதிகாரிகள் மாந்தீவுக்கு வந்து கட்டடங்களைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

இதனால் இப்பகுதி மக்கள் பெரும் பீதியும், அச்சமும் அடைந்துள்ளனர். அத்தோடு தொழுநோயாளர் வைத்தியசாலை மூடப்படும் அபாயமுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மாந்தீவை பாரிய இராணுவ முகாமாக நிறுவும் நோக்கில் மேற்கொள்ளப்படும் இந்நடவடிக்கைகள் தடுத்து நிறுத்தப்படாவிடின் வாவியைச் சுற்றி மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் பாதிக்கப்படுவதுடன் விசாரணை என்ற போர்வையில் கைதாகும் இளைஞர்கள் இத்தீவுக்கு கொண்டு செல்லப்பட்டு ஆபத்துக்கள் படைத்தரப்பால் ஏற்படலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இந்த ஆபத்தைத் தடுப்பதற்கு மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து சுகாதார சேவைகள் பணிப்பாளர், சுகாதார அமைச்சர் ஆகியோரைத் தொடர்பு கொண்டு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனப் பொதுமக்கள் கேட்டுள்ளனர்.

# பொது வேட்பாளரை நிறுத்த ஜே.வி.பிக்கு ஜாதிக ஹெல உறுமய அழைப்பு

(கொழும்பு)

எதிர்வரும் சனாதிபதித்தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நியமிப்பதற்கு ஜாதிக ஹெல உறுமய கட்சி ஜேவிபி. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இதற்கு ஜே.வி. பி. ஒத்துழைப்பை வழங்காவிட்டால் ஜாதிக ஹெல உறுமய தனித்து சனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் என ஜாதிகஹெல உறுமய பாராளுமன்றக் குழுத்தலைவர் மெத்ததானந்த தேரர் அறிவித்துள்ளார். ஜே.வி.பியினருக்கு மதம் சம்பந்தப்பட்ட அறிவு இல்லை. அவர்களின் அரசியல் மற்றும் பொருளாதாரக்கொள்கைகள் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் அரசியல் கொள்கைகளுக்கு மாறுபட்டது. நாட்டுப்பற்று அவர்களிடம் இருக்கின்றபடியால் இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்து பொது வேட்பாளர் ஒருவரை சனாதிபதித் தேர்தலுக்கு நிறுத்துவதையே எமது கட்சி விரும்புகின்றதென மெத்தானந்த தேரர் குறிப்பிட்டுள்ளார்.


**கண்ணீர் அஞ்சலி**

தோற்றம் 1975 12 24



மறைவு 2005 08 11

**பாலசுந்தரம் றமணகுமார்**

மேலாளர்-இளவேனில் வாணிபம்,

நாச்சிக்குடா.

எமது வாணிப பணியாளர் பா.றமணகுமாரின் அகால மரணச் செய்தி அறிந்து. ஆழ்ந்த கவலை அடைகின்றோம். இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பணிப்பாளர்,
பொறுப்பாளர்கள்,
பணியாளர்கள்,
இளவேனில் வாணிபம்.

(சி.12499)

**7ஆம் ஆண்டு நினைவினில்...**

தாயின் மடியில் 09 07 1975



தாயக மண்ணில் 12 08 1998

**லெப்டினன் -சந்தியா**

சுப்பிரமணியம் -கௌரி

(உருத்திரபுரம் இராணுவத்துடனான நேரடி மோதலின்போது வீரச்சாவு)

தாயின்மடியில் நேற்று
மழலையாய்
தாயகமண்ணில் இன்று
மாவீரராய்
மலரும் தாயகத்தில்~நாளை
வரலாற்றுப் பதிவாய்
வருவாய் எங்களும்

உன் குடும்பத்தினர்
(கிளிநொச்சி)

(6535)

# மண்மீட்பு என்பது அனைத்து உயிரினங்களுடன் சூழலும் பாதுகாக்கப்பட வேண்டும்



## புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன்

மண்மீட்பு என்பது மண்ணோடு இணைந்த அனைத்து உயிரினங்களும், சூழலும் பாதுகாக்கப்பட வேண்டியதாகும் என்று விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் அமைந்துள்ள சூழல் நல்லாட்சி ஆணையகக் கலந்துரையாடலில் நேற்றுக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; இந்த மண்ணைக் காப்பதற்காக நாங்கள் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் போராடி வருகின்றோம். அத்தகைய ஒரு மண்மீட்பு என்பது வெறுமனே ஒரு இராணுவ ரீதியான, அரசியல் ரீதியான மீட்பாகவும் இருக்கக் கூடாது. மண்மீட்பு என்பது மண்ணோடு இணைந்த அனைத்து உயிரினங்களும், சூழலும் காக்கப்பட வேண்டியதாகும். இதனை நீண்ட காலமாக நாங்கள் புரிந்திருந்தாலும் கூட இராணுவ அழுத்தங்கள் எம்மீது அதிகமாக சூழ்ந்திருந்த வேளையில் இது தொடர்பாக நாங்கள் கூடிய கவனத்தைச் செலுத்த முடியவில்லை.

சூழல் பற்றி கவனயீர்ப்பு என்பது எங்கள் எல்லோரிடமும் உள்ளது. எத்தனையோ முயற்சிகளுக்கு ஊடாக சூழலைப் பாதுகாப்பதற்கு மேற்குலக நாடுகள் முயற்சி எடுத்து வருகின்றன.

சூழலோடு ஒட்டி வாழ்ந்த நாங்களே சூழலை மிக மோசமாக அழிக்கின்றோம். குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாடே சூழலை மிக மோசமாகப் பாதிக்கின்ற இடமாக மாறியுள்ளது. சூழல் தொடர்பாக தமிழர்களாகிய நாங்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப்புலிகளின் திட்டமிடலுக்கும், மேம்பாட்டிற்குமான செயலகத்தில் சூழல் நல்லாட்சி ஆணையகத்தின் திட்டமிடலுக்கும், மேம்பாட்டிற்குமான செயலகப் பணிப்பாளர் ச.ரஞ்சன் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் காலை பத்து மணிக்கு ஆரம்பமானது.

இந்நிகழ்வில் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவக் கலாநிதி விக்கினேஸ்வரன் உட்பட யாழ்ப்பாணம், வவுனியா உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த பிரதேச உள்ளூராட்சி ஆணையாளர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், நீர்வளங்கள் வடிகாலமைப்புச் சபையினர் கலந்து கொண்டனர்.

இதேவேளை முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கான இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் இங்கு நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சுதந்திரப்பறவைகள் ஏடு இன்று வெளிவருகிறது

விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் அதிகார பூர்வ ஏடான "சுதந்திரப் பறவைகள்" ஆனி-ஆடி மாத இதழ் இன்று வெளிவருகிறது.

"மக்கள் பொறுமை இழப்பு புலிகள் பொறுமை காப்பு" எனும் பிரதான தலைப்பில் அமைந்த செய்தியுடன், "உழைக்கும்கரங்கள்", "சிகரங்களைத் தொட்ட பின்னும் இன்றும் பெண்கள்", "புலம்பெயர்வாழ்வின் வேலையும் பெண்களும்", "உறங்கும் மலைகள் விழிக்குமெனில்", "சாம்பல் மூடிக்கிடந்தவை", "சட்டங்கள் மட்டும் போதாது", "பாரம் ஒரு நாள் இறங்கும்" எனும தலைப்புகளில் அமைந்த சிறப்பு ஆக்கங்களுடனும் மற்றும் வழமையான பல்சுவை ஆக்கங்களுடனும் சுதந்திரப்பறவைகள் ஏடு வெளிவருகிறது.

# காஞ்சிரங்குடா அதிரடிப்படைமுகாம் மக்களால் எரியூட்டப்பட்டது

அம்பாறை காஞ்சிரங்குடா முகாமுக்கு வடக்கே உள்ள கல்லியந்தீவு விசேட அதிரடிப்படை முகாம் எரியூட்டப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு பொதுமகள் இதனை எரியூட்டியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் சம்பவ நேரம் முகாமில் அதிரடிப்படையினர் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காஞ்சிரங்குடா முகாமுக்கு அருகில் தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் இருவர் ஆயுததாரிகளினால் கொல்லப்பட்டமையை அடுத்தே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

- ஜே.வி.பி யின் திருகோணமலை மாவட்ட-

# பா.உறுப்பினர் ஐயந்த விஜயசேகரவின் பாதுகாப்பை அதிகரிக்க முடிவு

(கொழும்பு)

திருகோணமலையின் ஜே. வி.பி பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகரவுக்கு எட்டு பொலிசாரைக கொண்ட பாதுகாப்பை வழங்க நேற்று முன்தினம் கூடிய கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அத்துடன் அவருக்கு இரண்டு வாகனங்களை வழங்கவும் தீமானிக்கப்பட்டது.

அண்மையில் அவரது அலுவலகம் தாக்கப்பட்டமையை அடுத்து அவருக்குப் பாதுகாப்பு வழங்கக்கோரி நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் விடுக்கப்பட்ட கோரிக்கையையடுத்தே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

# ஆர்ப்பாட்டம்

காத்தான்குடி பிரதேச செயலகத்திற்கு முன்னால் நேற்று முன்தினம் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இதில் சுமார் 1000 பெண்களும் இவ்ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். இதேவேளை இந்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துக் காத்தான்குடியில் கடையடைப்பு மேற்கொள்ளபட்டது. (32)

# பல்கலை.மாணவர் மீதான தாக்குதலுக்கு ஐ.தே.கட்சி, சமசமாஜக் கட்சி கண்டனம்

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை பல தரப்புகளும் கண்டித்துள்ளன.

நேற்றுமுன்தினம் பல்கலைகழக மாணவர்கள் கோட்டைப் பகுதியில் வைத்து காவல்துறையினரால் தடுக்கப்பட்டு கண்ணீர்ப் புகைப் பிரயோகத்திற்கு உள்ளாகினர்.

கல்வி சீர்திருத்தத்திற்கு எதிராகவே மாணவர்களின் போராட்டம் இடம்பெற் றது.

இந்த நிலையில் சமசமாஜக் கட்சியின் முன்னாள் தலைவர் பட்டி வீரக்கோன் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோர் பொலிசாரின் நடவடிக்கைகளைக் கண்டித்துள்ளனர்.

## வரவு....

42 ஆயிரம் பட்டதாரிகளில் 27000 பட்டதாரிகள் அரச நிர்வாகங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இம் மாத முடிவில் மேலும் 19 ஆயிரம் பட்டதாரிகளுக்கு கல்வி அமைச்சில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என நிதி அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## சுனாமி...

நடவடிக்கைகளையும் சுனாமி நிவாரண சபை தனதாக்கிக் கொண்டுள்ளது. இந்த நிலையில் நிவாரண சபையின் சரத்துக்களினால் அரசியல் அமைப்பு மீறப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றம் தீமானித்திருப்பதாகவும் விமல் வீரவன்ச சுட்டிக்காட்டினார்.

விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தற்போதைய பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்தாது தோன்றிய அரசியல் ஆபத்தான நிலைமையையும், சமாதான முன்னெடுப்பு நடவடிக்கைகள் தொடர ஏற்பட்டுள்ள தடையையும் அனுமதித்தால் வடக்கு கிழக்கில் ஒரு பிரபாகரனிற்குப் பதிலாக நூறு பிரபாகரன்களை உருவாக்குவோராவோம்.

இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வைக்காண்பதில் ஆட்சிக்கு அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் தவறிவிட்டன. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வடக்குக் கிழக்குப்பகுதிகளில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட கடற்கரைப்பிரதேச மக்களிற்கு மனித நேய உதவிகளை வழங்கவும் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளவுமே பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை விடுதலைப்புலிகளுடன் கையொப்பமிடப்பட்டது.

சுனாமி நிவாரண சபை மூலம் எந்த விதத்திலும் விடுதலைப் புலிகளிடம் நாடு காட்டிக் கொடுக்கப்படவில்லை மக்கள் விடுதலை முன்னணியின் கொள்கைகளின்படி இனப் பிரச்சினைக்குத் தீர்வொன்று காண்பது கடினமானது என்றார்.

பிரதி அமைச்சர் டிலான் பெரேரா விவாதத்தில் பங்கேற்று ஊரையாற்றுகையில் நிலையான சமாதானத்தை எற்படுத்துவதற்காக பிரதி அமைச்சர்களின் அமைப்பு உயிரையும் தியாகம் செய்து செயற்படப் போவதாகத் தெரிவித்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் துணை அமைச்சர்களுக்கும் மக்கள் விடுத்லை முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே கடும் வாக்குவாதங்கள் ஏற்பட்டது. ஐ.தே. கட்சி பா.உறுப்பினர் ராஜித சேனாரட்ன உரையாற்றுகையில்; சிங்கள இனவாதத்தின் மூலமாக எப்போதுமே தமிழர்களின் விடுதலை உணர்வு வலுப்பெறுகிறது. 2001 ஆம் ஆண்டுவரை விடுதலைப் புலிகளின் தாக்குதல்களினால் பாதுகாப்புப் படைத்தரப்பில் 42 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். நிலையான சமாதானத்தின் மூலம் அனைத்துக் கொலைகளை யும் நிறுத்த முடியும். அத்துடன் போர்நிறுத்த உடன்படிக்கை மற்றும் சுனாமி நிவாரண சபை என்பவற்றை முன்கொண்டு செல்வது தொடர்பாக தலைமை அமைச்சர் மகிந்தராஜக்ஷ் தெளிவான கருத்தை வெளியிட வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.சுனாமி நிவாரண சபையை ஏற்படுத்தும்போது விடு தலைப் புலிகள் இயக்கத்திற்கு நிபந் தனைகளை விதிக்க இருந்த சந்தர்ப்பத்தை அரசாங்கம் கைவிட்டுவிட்டதாகவும் ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துர லியே ரத்தினதேரர் தெரிவித்துள்ளார்.

## போர்....

திணித்துக்கொண்டிருக்கின்றது என்பதை தெளிவுபடுத்தியிருக்கின்றோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் சம்பவங்கள் மக்களுக்கு அதிருப்தியையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அரச படைகளும் ஒட்டுப்படைகளும் தான் தொடரும் வன்முறைகளுக்கு காரணமாகும் என்பதையும் இச்சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளோம். படைத்தரப்பின் முகாம்களிலிருந்து கொண்டு செயற்படும் ஒட்டுப்படைகளின் நடவடிக்கைகள் சமாதானத்திற்குக் குந்தகமான, பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் சில வன்முறைச் சம்பவங்களில் விடுதலைப்புலிகளுக்குத் தொடர்புகள் இருப்பதாக படைத்தரப்பிலிருந்து வரும் குற்றச்சாட்டுக்கள் குறித்து அவர் தெரிவிக்கையில்;

சம்பவங்கள் எங்கே இடம்பெறுகின்றது? சம்பவத்தினால் பாதிக்கப்படுபவர்கள். யார்? என்பதையும் பார்க்கும் போது உண்மை விளங்கும்.

சமாதானத்திற்காக கௌசல்யன், சேனாதி எனப்பல போராளிகளை விலைகொடுத்துக்கொண்டிருக்கின்றோம். ஒட்டுப்படைகள் இயங்குவதையும் தாக்குதல் நடத்திவிட்டு படைமுகாம்களுக்குத் தப்பிச்செல்வதையும் மக்கள் கண்ணுற்றார்கள். இதனை விடுதலைப்புலிகளும் அவதானித்திருக்கின்றார்கள். உண்மைநிலை இவ்வாறிருக்க விடுதலைப்புலிகள் மீது பழிசுமத்துவது முழுப்பூசணிக்காயை சேற்றில் மறைப்பது போன்றது.

ஒட்டுப் படைகள் இல்லாது விட்டால் இவ்வாறான தாக்குதல்கள் நடைபெறுவதற்கு இடமில்லை என்றார்.

## ஆயுதங்களை....

இந்த நிலவரம் குறித்து கொழும்பு நன்றாகவே அறிந்து வைத்துள்ளது. கருணா குழு பிரிந்து சென்றதால் ஏற்பட்டுவரும் இயக்கத்திற்குள்ளான மோதல் என இதனைத் திரிபுபடுத்திக் கூற அரசாங்கம் முயல்கின்றது.

சமாதான முயற்சிகளில் ஆர்வம் உள்ளதாகவும், பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணவுள்ளதாகவும் கூறிவரும் சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கம், தனது இராணுவத்தை இவ்வாறு ஆயுதக் குழுக்களுடன் இணைந்து விடுதலைப்புலிகளுக்கு எதிராக நிழல் யுத்தமொன்றைப் புரிவதற்கு அனுமதிப்பதானது யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறி சிவில் யுத்தத்திற்குக் கொண்டு செல்வதாகவே அமையும்.

ஆயுதக் குழுக்கள் பற்றி கருத்துத் தெரிவித்திருந்த அரச சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால அது அர்த்தமற்றது என்றும், அபத்தமானது என்றும் கூறியிருந்தார். கள நிலவம் பற்றி அவர் போதியளவு அறிந்திராமையையே இது காட்டுகிறது என்று கூறிய அரசியல் ஆலோசகர்,

கருணா குழுவினர் கிழக்கில் காட்டுப்பகுதிக்குள் இருந்து செயற்படவில்லை. அவர்கள் சிறிலங்கா இராணுவத்தினாலேயே போசிக்கப்படுகின்றனர். அவர்களின் மறைவிடங்கள் இராணுவத்தினரால் பாதுகாக்கப்படுகிறது என்றும் கூறினார்.

கருணா குழுவிற்குப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கும் சிறிலங்கா இராணுவமே. யுத்த நிறுத்த உடன்படிக்கை எதிர்நோக்கியிருக்கும் அச்சுறுத்தல்களுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் கூறிய கலாநிதி அன்ரன் பாலசிங்கம், வடக்குக்கிழக்கில் இயங்கும் ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களையுமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்குமாறு சர்வதேச சமூகத்திடமும், சமாதான நடவடிக்கைகளுக்கு உதவி வழங்கும் நாடுகளிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளதோடு, சிறிலங்கா இராணுவத்தின் குறிப்பாக, புலனாய்வுப் பிரிவினரின் செயற்பாடுகளையும் கடுமையாக விமர்சித்தார்.

வடக்குக்கிழக்கில் இயங்கும் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு வடக்குக்கிழக்கில் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில், விடுதலைப்புலிகள் தங்கள் அரசியல் நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்ளக்கூடிய சூழ்நிலையொனறை உருவாக்கிய பின்னரே சமாதான நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்க முடியும் என்றும் அவர்தெரிவித்துள்ளார்.


வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ/து

**பகிரங்க ஏல விற்பனை**

வவுனியா பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான பின்வரும் பார ஊர்திகள் 27-08-2005ஆம் திகதி காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

1) 41-9663 டாட்டா
2) 27-2084 இசுசு

மேற்படி ஏலத்தில் பங்குபற்றுவோர் 23-08-2005ஆம் திகதிக்கு முன்பாக சங்கத் தலைமை அலுவலகத்தில் ரூபா 5000/= மீளளிக்கக் கூடிய வைப்பாகவும், ரூபா 500/= மீளளிக்க முடியாத வைப்பாகவும் பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

ஏல விற்பனை உப குழுவின் முடிவே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
வ.ப.நோ.கூ.சங்கம்,
பொதிமண்டப வீதி,
வவுனியா.

தொலைபேசி 2222384/2220131

(சி-12517)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.